**டிசம்பர் - 24**

**"அவருக்கு யேசு என்று பேரிடுவாயாக, ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்." - மத் 1.21.**

நம்முடைய இரட்சகருடைய பிறப்பிற்காகவும், சுவிஷேச செய்தி அனுப்பப்படுவதற்காகவும், தெய்வீக பராமரிப்பு, சிறிய நிகழ்ச்சிகளைக் கொண்டு ஆயத்தம் செய்தது, இந்த சிறிய நிகழ்ச்சிகளை கவனிப்பது, கர்த்தருடைய ஜனங்களின் விசுவாசத்தைப் பலப்படுத்துகிறதாயிருக்கிறது. கடந்த காலங்களிலும் தேவன் சிறிய காரியங்களிலும் எவ்வளவு கவனம் செலுத்தினார் என்பதை உணருவது தேவனுடைய ஞானத்திலும், இன்னும் வரப்போகிற எதிர் காலத்திற்காகவுள்ள அவருடைய திட்டத்தின் முன்னேற்பாட்டிலும் நம்பிக்கை கொள்ள அஸ்திவாரம் அளிக்கிறது. அவருடைய திட்டமானது பெத்லகேமில் பிறந்த அவரில் மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தந்தங்களின் நிறைவேறுதல் மையம் கொண்டிருந்தது. அதுபோலவே தேவ ஏற்பாட்டின் இதைவிட அதிக அளவான விவகாரங்களில் உள்ள தெய்வீக பராமரிப்பை உணர்துகொள்ளும்போது, அது அவருடைய ஜனங்களின் தனிப்பட்ட விவகாரங்களிலும், அந்தரங்க விவகாரங்களிலும் சம்மந்தப்பட்ட கர்த்தருடைய பராமரிப்பிலுள்ள விசுவாசத்திற்கு ஊக்கமளிக்கிறது. **- Z 00, 8 (R 2555).**

வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிற ஆட்களின் பெயர்கள் சம்பந்தப்பட்ட ஆளின் அல்லது பொருளின் குணம், வேலை, உத்தியோகம் அனுபவம், அடையாளமான சம்பந்தம், ஆகிய இவைகளின் விஷேச அர்த்தமுள்ளவைகளாயிருக்கின்றன. தேவனால் மேசியாவுக்குத் தெரிந்தெடுக்கப்பட்ட பெயர் "யேசு" இதற்குக் காரணமாக விளங்குகிறது. "யேசு" ஒரு லத்தீன் பெயர். எபிரேய பெயர் யோசுவா, யோசுவா (யேகோவா இரட்சிப்பாயிருக்கிறார்) இது நம்முடைய கர்த்தருடைய உத்தியோகத்தைக் குறிக்கிறது. இந்த யுகத்திலும், அடுத்த யுகத்திலும் அவர் மூலமாய் தேவனிடம் நெருங்கிச் சேருகிற எல்லோருமே அவருடைய ஜனங்களாயிருப்பார்கள். மனுக்குலம் பாவத்தின் ஆக்கினைத் தீர்ப்பு, சத்துவம், விளைவுகள் ஆகிய இவைகளுக்கடியில் கிடக்கிறது. பிரதிஷ்டை பண்ணியிருக்கிறவர்களின் சார்பாக இப்பொழுது சாட்டப்படுகிற அவருடைய புண்ணியம் பாவத்தின் ஆக்கினைத்தீர்ப்பிலிருந்து அவர்களை மீட்கிறது. கர்த்தரின் ஆவி, வார்த்தை, பராமரிப்பு இவைகளின் மூலமாக அவர் படிப்படியாக அவர்களைப் பாவத்தின் சத்துவத்திலிருந்தும், ஆட்சியிலிருந்தும் விடுவிக்கிறார். முடிவாக, உயிர்தெழுதலின் பாவத்தின் எல்லா விளைவுகளிலிருந்தும் அவர்களை மீட்கிறார். பிறகு தன்னுடைய புண்ணியத்தைப் பிரயோகித்து, மனுக்குலத்தைப் பாவத்தின் ஆக்கினையிலிருந்தும் மீட்பார். தன்னுடைய ஆசாரிய மத்தியஸ்த, சட்டமியற்றும் தகுதியுடைய நீதிபரிபாலன, தீர்க்கதரிசன தகப்பனாருக்குரிய வேலைகள் மூலமாய் கீழ்ப்படிதலினாலே தன்னுடைய ஜனங்களாகப்போகிற எல்லோரையும் பாவத்தின் சத்துவத்திலிருந்தும் விளைவுகளிலிருந்தும் விடுவிப்பார். அல்லேலுயா, எவ்வளவு பெரிய இரட்சகர்! அவர் இரட்சிக்க வல்லவராய் இருக்கிறார். **- P 36, 167.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**ஆதி 49.18, யோபு 33.23,24, சங் 72.4,12-14,17, 80.17, 89.19, ஏசா 28.16, 40.10,11, 42.6,7, 53.10-12, 62.11, சக 9.9, மத் 15.24, 18.11-13, லூக் 1.68-77, 2.11,30-34, அப் 16.31, ரோம 3.24-26.**

**கோபுர வாசிப்பு : Z 09, 375 (R 4534).**

**வினாக்கள் : யேசு என்ற பெயர் எனக்கு என்ன அர்த்தமுடையதாயிருக்கிறது? ஏன்? எப்படி? அது என்னில் என்ன உணர்வை ஏற்படுத்தியது?**